# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புநர்
திருமதி.சூ.மு.பாரிஜான்.,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

பெறுநர்.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி.

**ந.க..எண். 1838/2022/இ2** **நாள்: 27.06.2023**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகள் –கடையநல்லூர் நகராட்சி – ஜீன்–2023 மாதம் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடத்தப்பட்டது– கூட்ட நடவடிக்கை விபரங்கள் அனுப்பிவைத்தல்– சார்பாக.

**பார்வை.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் குறிப்பாணை கடித ந.க.எண்.2652/2022/அ3, நாள்.18.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியில் 27.06.2023 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின், கூட்ட நடவடிக்கை விபரங்கள் இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு.**
27.06.2023 அன்று நடைபெற்ற
நகர்மன்றக்கூட்டப் பொருள்

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி.

## கடையநல்லூர் நகராட்சி

## 27.06.2023 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டப்பொருள்கள் விவரம்.

**பொருள் எண். 1**

கடையநல்லூர் நகராட்சி 2022–2023ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**(ந.க.எண். 1608/2023/சி1)**

**தீர்மானம் எண்:– 365**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண். 2**

கடையநல்லூர் நகராட்சியில் இயங்கி வரும் கணிணி வசூல் மையங்களுக்கு VPN CONNECTION (VIRUAL PRIVATE NET WORK) BSNL நிறுவனம் மூலம் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி இணைப்புகளுக்கு 01.01.2023 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு ரூ.48295/–ஐ BSNL நிறுவனத்திற்கு செலுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.29280/2016/IT நாள்.19.05.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.48295/–ஐ BSNL நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அலுவலக பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 640/2023/அ1)**

**தீர்மானம் எண்:– 366**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 3**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 6 பசுமை நுண் உரமாக்கல் மையத்திலிருந்து தயார் செய்யப்படும் பசுமை உரத்தினை 1 கிலோவிற்கு ரூ.20/– என விலை நிர்ணயம் செய்து செழிப்பு என்ற விற்பனை பெயர் சூட்டி விற்பனை செய்ய ஏதுவாக பகுப்பாய்வு செய்த சத்து விபரங்கள்(Nutrient Content) அடங்கிய பைகள் அச்சடிக்க 2023–24ம் ஆண்டுக்கான உத்தேச செலவுத் தொகை ரூ.200000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1839/2023/எச்1)**

**தீர்மானம் எண்:– 367**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு பசுமை உரக்குடில் மூலம் தயாரிக்கப்படும் இயற்கை நுண் உரத்தினை விற்பனை செய்திட உரிமம் பெற ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக – உர கட்டுப்பாடு இயக்குநர் அவர்களுக்கு இணையவழியில் விண்ணப்பித்து பகுப்பாய்வு செய்த சத்து அளவு (Nutrient Content) விகிதம் குறித்து ஆய்வறிக்கை பெற தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விண்ணப்பக் கட்டணம் ரூ.2630/– சுகாதார ஆய்வாளர் திரு.சிவா என்பவரால் செலுத்தப்பட்டதால் அன்னாருக்கு ரூ.2630/–ம்

| வ.எண் | கட்டண வகை | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | இயற்கை உர விற்பனை உரிமம் பெறுவதற்கான விண்ணப்பக்கட்டணம் மற்றும் உர மாதிரி அனுப்பிய தபால் செலவினம் | 2630 |
| 2. | பகுப்பாய்வு கட்டணம் (6 உர மாதிரிகளுக்கு) | 23100 |
| | மொத்தம் | 25730 |

பகுப்பாய்வு கட்டணம் ஒரு உர மாதிரிக்கு ரூ.3850/—வீதம் ஆறு உர மாதிரிகளுக்கு 3850•6=23100/- (VCS Commercial Seed Production Agronomy) என்ற கணக்கு எண் மூலம் ஆன்லைன் முறையில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்சி நிறுவனம், மதுரை நிறுவனத்துக்கு செலுத்தவும் ஆக மொத்தம் ரூ.25730/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1839/2023/எச்1)**

**தீர்மானம் எண்:— 368**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

கடையநல்லூர் நகராட்சி எல்லையில் பாதாள சாக்கடை வசதி இல்லாததால் கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்து கொண்டு செல்லவும் அப்புறப்படுத்தவும் கழிவுநீர் வாகனங்கள் பயன்படுப்படுகின்றன.

மனிதர்களை பயன்படுத்தி கழிவுநீர் அகற்றுதல் தடுப்பு மற்றும் மறுவாழ்வுச் சட்டம்—2013ன் பிரிவு 7ன்படி மலக்கசடுகளை கழிவுநீர் தொட்டியில் இறங்கி அகற்றுவதற்கு மனிதர்கள் யாரையும் பணியமர்த்தக் கூடாது பிரிவு 9ன்படி மீறுபவர்களுக்கு எதிராக தண்டனை மற்றும் அபராதம் ஆகியவற்றை வழங்குகிறது.

இது தொடர்பாக கழிவுநீர் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு சான்றிதழில் கழிவுநீர் டேங்கர் எண் வாகன வகை பதிவு செய்யப்பட வேண்டும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 86ன் கீழ் கழிவுநிர் வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகன பதிவு சான்றிதழில் கழிவுநீர் டேங்கர் என பதிவு செய்யப்படவில்லை என்றால் பதிவுச் சான்றிதழில் கழிவுநீர் டேங்கர் என பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது மற்றும் 15 நாட்களுக்குள் அந்தந்த வட்டார போக்குவரத்து அதிகாரிகளை அணுகி சரியான வாகனத் தகுதி சான்றிதழுடன் அனுமதி பெறவும் தெரிவிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் கசடு கழிவு அகற்றும் உரிமை சத்து செய்யப்படும் என்ற விபரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், தென்காசி அவர்கள் மூலம் தினசரி நாளிதழில் வெளியிட்டு பின்னர் அரசிதழில் செய்தி வெளியிடவும் அது தொடர்பான அனைத்து செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/— (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 482/2021/எச்1)**

**தீர்மானம் எண்:— 369**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

கடையநல்லூர் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கு அதிகமாக அளவுள்ள திடக்கழிவுகள் உருவாக்கக் கூடிய கட்டிடங்களை பயன்படுத்தும் மத்திய அரசுத்துறைகள், நிறுவனங்கள், மாநில அரசுத்துறை நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் இதர கல்வி நிறுவனங்கள் , மாணவர் விடுதிகள் வர்த்த (ஷாப்பிங்) மால்கள், வழிபாட்டுத்தலங்கள் விளையாடு அரங்குகள் விளையாட்டு வளாகங்கள் துணி விற்பனையங்கள், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் ஆகியோர் மற்றும் சந்தை ஒப்பந்தம் எடுத்தோர் ஆகியோர் அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (BULK WASTE GENERATORS) என தகுதியுடையோர்களாகவர்.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி நாள் ஒன்றிற்கு 100 கிலோவிற்கு மேல் கழிவுகள் உற்பத்தி விகிதத்தை கொண்டிருக்கின்ற அமைப்புகள் பின்வருமாறு.

| தலைப்பு | விளக்கம் |
|---|---|
| குடியிருப்பு | 300க்கும் மேற்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு வளாகம் மாநில / மத்திய அரசு வீட்டு காலணிகள் குடியிருப்பு நல சங்கம் (RWAS) |
| வணிகம் | அனைத்து ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் வணிக வளாகங்கள் / மால்கள் |
| அரசு பொதுத்துறை அல்லது தனியார் அமைப்புகள் பொதுத்துறை | அலுவலகங்கள் தனியார் துறை அலுவலகங்கள் வளாகங்கள் மற்றும் கட்டிடங்கள் |
| சமுக உள்கட்டமைப்பு | 200க்கும் மேற்பட்ட படுக்கைகள் கொண்ட தனியார் மருத்துவமனைகளுக்குள் கேன்டீன்கள் / ரெஸ்டாரண்டுகள் வழிபாட்டு இடம் அரங்கம் / விளையாட்டு வளாகங்கள் கிளப்புகள் திருமண மண்டபங்கள் பொழுதுபோக்கு வளாகங்கள் விடுதிகள் / கல்லூரிகள் / பல்கலைக் கழகங்கள் / 500க்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்ட பயிற்சி நிறுவனங்கள் ரயில் நிலையம் பேருந்து நிலையம் / விமான நிலையம் போன்றவை |

எனவே மேற்குறிப்பிட்ட குடியிருப்புகள் வணிக பகுதிகள் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் 100 கிலோவிற்கு அதிகமாக கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று பதிவு செய்து தங்கள் வளாகத்திற்குள் உருவாகும் கழிவுகளில் மக்கும் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு ஏற்ப உட்கட்டமைப்பு வசதிகளை மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களிடம் வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் மொத்த கழிவு உருவாக்கும் (BULK WASTE GENERATORS) அவர்கள் மீது திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர், அலுவலகம், தென்காசி அவர்கள் மூலம் தினசரி நாளிதழில் வெளியிட்டு பின்னர் அரசிதழில் செய்தி வெளியிடவும் அது தொடர்பான அனைத்து செலவினங்களுக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1923/2023/எச்1)**

**தீர்மானம் எண்:– 370**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 7**

இந்நகராட்சி சொந்தமான குத்தகை இனங்களுக்கு 2023–2026 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி / பொது ஏல அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி வழியாக தினத்தந்தி நாளிதழில் 02.06.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் எண்.2324TVL3701029292 நாள்.02.06.2023 ன்படி தொகை 47376/–யை தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 4959/2020/அ3)**

**தீர்மானம் எண்:– 371**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 8**

இந்நகர்மன்ற தீர்மானம் எண்.295 நாள்.18.09.2017 இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.15.11.2017ன்படி இந்நகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள வடக்கு பக்கம் கடை எண்.1ன் உரிமம் 01.10.2017 முதல் 30.09.2021 வரை திரு.அலிபாதுஷா, 178C11, மெயின்ரோடு, கடையநல்லூர் என்பவருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடையின் உரிமம் தனக்கு தேவையில்லை எனக் கோரியதன் அடிப்படையில் மேற்கண்ட கடை எண்.1 பேருந்து நிலையம் வடக்கு பக்கம் நாளது வரை மறு ஏலம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அன்னாரின் 09.05.2023ம் தேதிய மனுவில் மேற்கண்ட கடைக்கு செலுத்திய வைப்புத் தொகை ரூ.14538/–ஐ திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே 2018 டிசம்பர் முதல் 2019 மார்ச் வரை உள்ள காலங்களுக்கு உரிய வாடகை தொகையை மனுதாரர் வைப்புத் தொகை கணக்கில் ஈடுசெய்தது போக மீதமுள்ள தொகை ரூ.14538/– இந்நகராட்சியின் வைப்புத் தொகை பதிவேட்டில் 2019–20 வருடம் வரிசை எண்.3ல் இருப்பாக உள்ளது. எனவே திரு.அலிபாதுஷா என்பவருக்கு ரூ.14538/–யை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மீதமுள்ள வைப்புத்தொகையை திரும்ப வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1553/2023/அ3)**

**தீர்மானம் எண்:– 372**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 9**

கடையநல்லூர் நகராட்சி நகர் மன்றத் தலைவர் அவர்கள், நகர்மன்ற துணைத் தலைவர் அவர்கள் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்க 09.06.2023 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஸ்டுடியோ விபரம் | கார்டு 1க்கு விலை |
|---|---|---|
| 1. | திரு.V.ராஜா,<br>ராஜா கம்பியூட்டாஸ் அன்ட் ஸ்டுடியோ,<br>502, மெயின் ரோடு,<br>கடையநல்லூர். | ரூ.200/– |
| 2. | அதர்வா டிஜிடேல் ஸ்டுடியோ<br>புதிய பேருந்து நிலையம் ,<br>கடையநல்லூர் | ரூ.250/– |

மேற்கண்ட வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.V.ராஜா, ராஜா கம்பியூட்டர்ஸ் அன்ட் ஸ்டுடியோ, கடையநல்லூர் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே வ.எண்.(1)ல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.7000/–க்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1832/2022/இ2)**

**தீர்மானம் எண்:– 373**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 10

இந்நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்கண்டவாறு நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்திற்கு தேவையான கூட்டப்பொருட்கள் (அஜண்டா) ஜெராக்ஸ் எடுத்த வகைக்கு தொகை ரூ.15360/– (பதினைந்தாயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்) திரு.வி.முருகேசன், ராஜம் ஜெராக்ஸ், 139/1, நியூ பஜார், கடையநல்லூர் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| மாதம் | நகல் விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 07.10.2022 | பக்கம் 16 x ரூ.2 x 60 செட் | 1920 |
| 21.10.2022 | பக்கம் 12 x ரூ.2 x 60 செட் | 1440 |
| 29.11.2022 | பக்கம் 34 x ரூ.2 x 60 செட் | 4080 |
| 04.01.2023 | பக்கம் 17 x ரூ.2 x 60 செட் | 2040 |
| 23.01.2023 | பக்கம் 2 x ரூ.2 x 60 செட் | 240 |
| 17.03.2023 | பக்கம் 29 x ரூ.2 x 60 செட் | 3480 |
| 28.04.2023 | பக்கம் 18 x ரூ.2 x 60 செட் | 2160 |
| | மொத்தம் | 15360 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2709/2022/இ2)

தீர்மானம் எண்:– 374

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 11

தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண். 397/2018–ல் (திரு.மாரியப்பன் என்பவர் தொடர்ந்த வழக்கில்) இந்நகராட்சி சார்பாக முன்னாள் நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எஸ்.ஜோன்ஸ் என்பவர் வழக்கு நடத்தி வந்தார். மேற்கண்ட வழக்கில் திரு.மாரியப்பன் சார்பாக தற்போதைய இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.முருகையா பாண்டியன் என்பவர் ஆஜரானார். திரு.முருகையா பாண்டியன் (இந்நகராட்சி வழக்கறிஞர்) தற்போது மேற்படி வழக்கின் கோப்புகளை திரு.மாரியப்பன் என்பவரிடம் ஒப்படைத்து திரு.மாரியப்பன் என்பவர் தனக்கான வேறு ஒரு வழக்கறிஞரை நியமித்து வழக்கு நடத்தி வருகிறார்.

இந்நிலையில் மேற்கண்ட வழக்கில் இந்நகராட்சியின் வழக்கறிஞர் திரு.முருகையா பாண்டியன் என்பவர் இந்நகராட்சி சார்பாக ஆஜராக இயலாததால் வேறு ஒரு வழக்கறிஞரை நியமித்துக்கொள்ள இந்நகராட்சியின் வழக்கறிஞர் திரு.முருகையா பாண்டியன் தமது 08.04.2023–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.397/2018–ல் மட்டும் இந்நகராட்சி சார்பாக ஆஜராக வழக்கறிஞர் திரு.P.ஆனந்த் என்பவர் மூலம் வாதிடவும் வழக்கறிஞருக்கான செலவிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1449/2019/எப்1)

தீர்மானம் எண்:– 375

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 12

கடையநல்லூர் நகராட்சி கதவு எண்.35/1C25C5, ஆலிம்ஷா தெருவில் வசிக்கும் திரு.A.M.முகம்மது ஆதம் என்பவர் வரிவிதிப்பு எண்.141.033/900457க்கு புதிய குடிநீர் இணைப்பு கோரி அதற்கான பதிவுக் கட்டணம் ரூ.100/–ஐ இவ்வலுவலக ரசீது எண்.8843 நாள்.13.01.2023ன்படி 35/1C ஆலிம்ஷா என்ற முகவரியில் செலுத்தியுள்ளார். மேற்கண்ட புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான கேட்பு அறிவிப்பு 5/1C என்ற முகவரிக்கு கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் மேற்கண்ட வரிவிதிப்பு எண்ணிற்கு ஆரம்பக் கட்டணம் ரூ.14495/–ஐ இவ்வலுவலக ரசீது எண் 11277 நாள்.27.03.223 அன்று செலுத்தியுள்ளார். மேற்கண்ட ஆரம்பக் கட்டணம் செலுத்தப்பட்ட ரசீதில்

வரிவிதிப்பாளர் பெயர் முகம்மது ஆதம் என்பதற்கு பதிலாக முகைதீன் மீரா W/o இப்ராகிம் 1C225B/15A கலந்தர் மஸ்தான் தெரு, கடையநல்லூர் என கணிணியில் வரப்பெற்றுள்ளது.

இந்நிலையில் மனுதாரர் புதிய குடிநீர் இணைப்பு வழங்க கோரிய பெயர் கதவு எண் ஆகியவை சொத்துவரி ரசீதில் உள்ள முகவரியும், மனுதாரர் குடிநீர் இணைப்பு வழங்க பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்ட முகவரியும், ஆரம்பக் கட்டணம் செலுத்த கோரிய கேட்பு அறிவிப்பில் உள்ள முகவரியும் மனுதாரர் ஆரம்பக்கட்டணம் செலுத்திய முகவரியும் கணிணியில் முரணாக உள்ளதால் வரிவிதிப்புதாரருக்கு புதிய இணைப்பு வழங்கி கேட்பு ஏற்றம் செய்திட இயலாத நிலையில் உள்ளதால் திரு.முகம்மது ஆதம் என்பவர் செலுத்தப்பட்ட ஆரம்ப கட்டணம் ரூ.14495/—ஐ திரும்பி வழங்கவும், வரிவிதிப்பு எண்.141/033/900457ல் கணிணி முன்னுரிமை பதிவினை நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண். 1301/2023/இ2)**

**தீர்மானம் எண்:— 376**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 13**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் குடிநீர் விநியோகம் தொடர்பாக நடத்தப்படும் ஆய்வுக்கூட்டத்தில் இந்நகராட்சி மூலம் விநியோகம் செய்யப்படும் கருப்பாநதி பெரியாற்று குடிநீரின் தரம் குறித்தும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் விநியோகம் செய்யப்படும் தாமிரபரணி குடிநீரின் தரம் குறித்தும் அவ்வப்போது குடிநீர் மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கருப்பாநதி பெரியாற்றுப் படுகையிலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீர் மற்றும் தாமிரபரணி குடிநீரின் தரம் குறித்து அவ்வப்போது குடிநீர் மாதிரிகள் எடுத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பரிசோதனை செய்ய ஒரு ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.230000/— இரண்டு லட்சத்து முப்பதாயிரத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் விநியோகப் பணியின் முக்கியத்துவ கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1301/2023/இ2)**

**தீர்மானம் எண்:— 377**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 07.05.2023 ஆம் தேதிய அறிவுரைக்கிணங்கவும், மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி அவர்களின் அறிவுரைக்கேற்பவும், தமிழக அரசின் ஓராண்டு மற்றும் ஈராண்டு சாதைனைகளை பொதுமக்களுக்கு விளம்பர செய்திடும் வகையில் பிரதானமான இடங்களில் விளம்பர பதாகைகள் (Flex Hoardings) வாடகை அடிப்படையில் நிறுவிடவும், இலகுரக வாகனத்தில் பொறுத்தப்பட்ட மின்னனு பலகை (Vehicle Mounted LED Display Board) மூலம் நகரின் பிரதான பகுதிகளில் விளம்பரம் செய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1,70,000/—க்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளலாம்.
3. மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதியுடன் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1588/2023 /இ1)**

**தீர்மானம் எண்:— 378**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

அலுவலக பயன்பாட்டிற்கு A–4 அளவு கலர் பிரிண்டர் புதிதாக GEM விலைவிகிதத்தில் கொள்முதல் செய்திடவும், அதற்கான செலவினம் ரூ.45,000/–க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் தலைப்பு நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளலாம்.

**(ந.க.எண். 2075/2023/இ1)**

**தீர்மானம் எண்:– 379**

அனுமதிக்கப்பட்டது.
மேலும் ஒரு எண்ணம் (கலர் பிரிண்டர்)மட்டும் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 16**

கடையநல்லூர் நகராட்சி – மேலக்கடையநல்லூர் வார்டு எண்.26 உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தின் சுற்றுச்சுவர் அமைத்து பல வருடங்கள் ஆன நிலையில் தற்போது கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள சுற்றுச்சுவர் சிதலமடைந்து இடிந்து விழுந்துள்ளது. இதனால் அந்நியர்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் உள்ளே புகுந்து அசாம்பாவிதங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதனை தடுக்கும் பொருட்டு மேற்படி இடத்தில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு தயார் செய்துள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00/–இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1617/2023/இ1)**

**தீர்மானம் எண்:– 380**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 17**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.01, குமந்தாபுரத்தில் அமைந்துள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாக சுற்றுச்சுவர் கிழக்குப் பகுதியில் சாலையோரத்தில் தேங்கிய மழைநீராலும், பலத்த காற்றுடன் கூடிய மழையினாலும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள மரம் சாய்ந்து சுற்றுச்சுவர் இடிந்துள்ளது. மேற்படி சுற்றுச்சுவரினை புதுப்பித்து கட்டுவதற்கு தயார் செய்துள்ள மதிப்பீடு ரூ.5.45/–இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1617/2023/இ1)**

**தீர்மானம் எண்:– 381**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 18**

கடையநல்லூர் நகராட்சி 1 முதல் 33 வார்டுகளில் அமைந்துள்ள 13 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் தலைமை பணியிட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் குளோரின் பிளான்ட்கள் அமைக்கப்பட்டு நான்கு வருட காலங்கள் முடிவுற்ற நிலையில் குளோரின் பிளான்ட்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை ஒரு வருடத்திற்கு பராமரிப்பு செய்வதற்க ஒப்பந்தம் கோரப்பட்டு அதற்கான ஒப்பந்த காலம் மே 2023 மாதத்துடன் முடிவுற்ற நிலையில் பொதுமக்களுக்கு குளோரின் கலந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு தொடர்ந்து 13 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் ஒரு எண்ணம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பிளான்ட்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்யவும், பராமரிப்பு பணியினை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.4,50,000/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர, அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1617/2023/இ1)

**தீர்மானம் எண்:– 382**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சிப் பகுதியில் உள்ள 1 முதல் 33 வார்டுகளில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு 1. இந்திரா நகர், 2. தீயணைப்பு நிலையம், 3.வாரச்சந்தை வாளகம், 4.மலம்பாட்டை ரோடு, 5.இடைநிலை நீருந்து நிலையம் (6.75), 6.இடைநிலை நீருந்து நிலையம் (4.86), 7.கிருஷ்ணாபுரம் ரோடு எண்.11 , 8.கிருஷ்ணாபுரம் பூங்கா, 9.குமந்தாபுரம் (0.80), 10. குமந்தாபுரம் (0.90), 11. முத்துகிருஷ்ணாபுரம் (செக்கடி), 12.மாவடிக்கால், 13. இக்பால் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் அமைக்கப்பட்டுளள குளோரின் பிளான்ட்களில் ஒரு வருடத்திற்கு தேவையான குளோரின் சிலிண்டர்கள் மாதம் ஒன்றிற்கு 13 சிலிண்டர்கள் வீதம் ஒரு வருடத்திற்கு உத்தேசமாக 160 எண்ணம் சிலிண்டர்கள் தேவைப்படும் என்பதால் அதனை விநியோகம் செய்யவும், பொருத்துவதற்கும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.15,36,000/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர, அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1616/2023/இ1)

**தீர்மானம் எண்:– 383**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 20**

இந்நகராட்சி பொறியாளர் குடியிருப்பில் மின்சாரம் இல்லாத நேரங்களில் பொறியாளர் அவர்கள் மிகவும் சிரமப்படுவதாக தெரிவித்துள்ளதால், மேற்படி குடியிருப்பில் 900 வாட்ஸ் திறன் கொண்ட இன்வெட்டர் மற்றும் 100 Ah பேட்டரி பொருத்திடவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.26,500/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1617/2023/இ1)

**தீர்மானம் எண்:– 384**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 21**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 2021–2022 மற்றும் 2022–2023ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நிதி விபரத்தினை தினமலர் நாளிதழில் 21–வது பக்கத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் புகைப்படத்துடன் ஆணையாளர் பெயர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சார்பாக அரசு விளம்பரமாக பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (GST உட்பட)

ரூ.25,200/—ஐ DINAMALAR, திருநெல்வேலி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1994/2023 /இ1)**

**தீர்மானம் எண்:— 385**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 22

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 2021—2022 மற்றும் 2022—2023ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நிதி விபரத்தினை மாலைமலர் புத்தகத்தில் நெல்லை பதிப்பில் 17—வது பக்கத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் புகைப்படத்துடன் ஆணையாளர் பெயர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சார்பாக அரசு விளம்பரமாக பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (GST உட்பட) ரூ.15,000/—ஐ MALAR PUBLICATIONS LTD, திருநெல்வேலி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1932/2023 /இ1)**

**தீர்மானம் எண்:— 386**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 23

கடையநல்லூர் நகராட்சி — வார்டு எண்.05, கிருஷ்ணாபுரம் மெயின்ரோடு மற்றும் மலம்பாட்டை ரோடு சந்திப்பில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்படும் வால்வு சேம்பரில் அதிகமாக மண் நிறைந்துள்ளதால், மேற்படி வால்வினை சரிவர இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது எனவே மேற்படி வால்வினை சரிசெய்யவும், அதற்காக தயார் செய்துள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.0.90/—இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர, அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1617/2023/இ1)**

**தீர்மானம் எண்:— 387**

அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.24

இந்நகராட்சிப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் பெரியாற்று படுகை மற்றும் கல்லாற்றில் உள்ள கிணறுகள் மூலம் பெறப்பட்டு தலைமை பணியிட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி மற்றும் 13 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் சேகரிக்கப்பட்டு பகிர்மான குழாய்கள் வழியாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீனை விநியோகம் செய்யும் பணிகளான குடிநீர் வால்வு அடைப்பு, திறப்பு மற்றும் மோட்டர்கள், ஜென்செட், வால்வு பிட் சுத்தம் செய்யும் பணிகளுக்கு இந்நகராட்சி குடிநீர் பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஏற்கனவே தனியார் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை தொடர்ந்து தனியார் ஒப்பந்த அடிப்படையில் ஜீலை—2023 முதல் அக்டோபர் 2023 வரை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.19.50/— லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர, அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1950/2023/இ1)**

**தீர்மானம் எண்:– 388**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 25**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 2021–2022 மற்றும் 2022–2023ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நிதி விபரத்தினை தினத்தந்தி நெல்லை பதிப்பில் 14–வது பக்கத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் புகைப்படத்துடன் ஆணையாளர் பெயர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சார்பாக அரசு விளம்பரமாக பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (GST உட்பட) ரூ.39,480/–ஐ THE DAILY THANTHI, திருநெல்வேலி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1931/2023 /இ1)**

**தீர்மானம் எண்:– 389**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 26**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 2021–2022 மற்றும் 2022–2023ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நிதி விபரத்தினை தினகரன் நாளிதழில் 13–வது பக்கத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் புகைப்படத்துடன் ஆணையாளர் பெயர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சார்பாக அரசு விளம்பரமாக பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (GST உட்பட) ரூ31,200/–ஐ KAL PUBLICATIONS (P) LTD, திருநெல்வேலி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1588/2023/இ1)**

**தீர்மானம் எண்:– 390**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 27**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 2021–2022 மற்றும் 2022–2023ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நிதி விபரத்தினை தமிழ் முரசு சிறப்பு மலர் புத்தகம் நெல்லை பதிப்பில் 103–வது பக்கத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் புகைப்படத்துடன் ஆணையாளர் பெயர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சார்பாக அரசு விளம்பரமாக பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (GST உட்பட) ரூ.12,500/–ஐ KAL PUBLICATIONS (P) LTD, திருநெல்வேலி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1615/2023 /இ1)**

**தீர்மானம் எண்:– 391**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 28**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடறுப்புமனையினை இயக்குவதற்கான உரிமத்தினை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் புதுப்பிக்க தெரிவித்து வரப்பெற்றுள்ள கடிதத்தின் அடிப்படையில் 31.03.2023 வரையிலான கட்டணம் நிலுவைத்தொகை ரூ.33,800/– மற்றும் 2023 முதல் 2025 ஆண்டு வரையிலான கட்டண தொகை ரூ.33,800/– ஆக மொத்தம் ரூ.67,600/– மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், என்ற பெயருக்கு வரைவோலையாக வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1540/2023/இ1)**

**தீர்மானம் எண்:– 392**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.29**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கும் புதிய ஈப்பு எண்.TN76 AT2634 வாகனம் 01.08.2022ம் தேதி அன்று வாங்கப்பட்டு தற்போது 10,000 கிலோ மீட்டருக்கு மேல் இயக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்காணும் வாகனத்திற்கு ஆயில் மாற்றம் செய்யவும், வாகனத்தினை முழுவதும் பரிசோதனை செய்யவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டெரிக் மோட்டார்ஸ் (பி) லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.10,000/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1750/2023/இ1)**

**தீர்மானம் எண்:– 393**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.30**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள தலைமைபொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்கள் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், 25.09.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தின் குறைவான விலைவிகிதத்தினை ஏற்று இந்நகர்மன்ற தீர்மான எண்.261, நாள்.29.10.2020–ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்தரவு வழங்கி மூன்று வருடங்கள் கால நீட்டிப்பு செய்து பணி நடைபெற்று வந்தது. இந்நிலையில் தற்போது இந்நகராட்சி அனைத்து வார்டுகளிலும் பயன்பாட்டில் இருந்து வந்த தெருவிளக்குகளை ஆற்றல் மிகுந்த எல்.இ.டி விளக்குகளாக மாற்றம் செய்யவும், புதிய எல்.இ.டி

விளக்குகள் பொருத்தும் பணியினை மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் கால வரையறை 20.12.2022 தேதியுடன் முடிவடைவதால், நிபந்தனைகளுக்குட்பட்டு வார்டு எண். 1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் உள்ள தெருக்களில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை 21.12.2022 முதல் எல்.இ.டி விளக்குகள் பொருத்தும் பணிக்கான வேலை உத்தரவு வழங்கி பணிகள் தொடங்கும் காலம் வரையிலும் மேற்கெள்ள பணிக்கான கால நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1240/2016/இ1)**

**தீர்மானம் எண்:- 394**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.31**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கும் பழைய ஈப்பு எண்.TN76 AC1093 வாகனம் 2015 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு தற்போது 3,15,880 கிலோ மீட்டருக்கு மேல் இயக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் வாகனத்திற்கு ஆயில் மாற்றம் செய்யவும், வாகனத்தினை முழுவதும் பரிசோதனை செய்து பழுதுகளை நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ளவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டெரிக் மகேந்திரா & மகேந்திரா, திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.87,706/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர, அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 4124/2023/இ1)**

**தீர்மானம் எண்:- 395**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.32**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திரு.ஆ.ராஜேந்திர பிரசாத், ஒப்பந்ததாரர் 2020-2021 மற்றும் 2022-2023 ஆண்டில் பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் திட்டப்பணியின் கீழ் எடுத்து செய்து கீழ்காணும் பணி முடிவு பெற்று ஒரு ஆண்டிற்கு மேல் ஆகுவதாலும், தணிக்கை முடிவுற்றுள்ளதாலும் அப்பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 1ரூ மற்றும் 5ரூ கூடுதல் வைப்புத்தொகைகளை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | அளவு புத்தகம் எண் மற்றும் பக்கம் எண். | 1 % ஒப்பந்தப் புள்ளி முன் வைப்புத் தொகை ரூ. | 1 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூ. | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.07, மங்கம்மாள் சாலை மற்றும் வார்டு எண்.02, கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி . | 11/2020-21 பக்கம் எண்.1- 13 | 6,000 | 6,000 | 30,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.05, பேச்சியம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி. | 55/2020–21 பக்கம் எண்.1– 23 | 9,000 | 9,000 | 45,000 |
| 3 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.02, கிருஷ்ணாபுரம் முப்புடாதியம்மன் கோவில் தெருவில் மங்கம்மாள் சாலை மற்றும் வார் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி . | – | 6,000 | 6,000 | 30,000 |
| 4 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.05, பள்ளிக்கூடம் தெற்கு தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி.. | 107/2020–21 பக்கம் எண்.1– 25 | 4500 | 4500 | 21503 |
| 5 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.27, பவுண்டு தெருவில் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி . | 04/2020–21 பக்கம் எண்.1– 25 | 2500 | 2500 | 11116 |
| 6 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.27, சிவாஜி நகர் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி . | 03/2020–21 பக்கம் எண்.1– 25 | 2500 | 2500 | 11248 |
| 7 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.04, பாரதியார் வடக்கு தெருவில் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி . | 52/2020–21 பக்கம் எண்.1– 25 | 2500 | 2500 | 11137 |
| 8 | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.33, மறுகால் தெருவில் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி . | 53/2020–21 பக்கம் எண்.1– 25 | 2500 | 2500 | 12109 |
| 9 | கடையநல்லூர் நகராட்சி – சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2019–2020ன் கீழ் அட்டகுளம் மேல்புறம் அருந்ததியர் சமுதாயத்திற்கு எரிமேடை அமைக்கும் பணி. | 109/2020–21 பக்கம் எண்.1– 36 | 4500 | 4500 | 22500 |
| 10 | கடையநல்லூர் நகராட்சி – சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2020–2021ன் கீழ் கீழத்தெரு நைனா முகம்மது ஜீம்மா பள்ளிவாசல் மையவாடியில் சுற்றுசுவர் அமைக்கும் பணி. | 102/2020–21 பக்கம் எண்.1– 10 | 4000 | 4000 | 20000 |
| 11 | கடையநல்லூர் நகராட்சி – 15வது நிதிக்குழு மான்ய திட்டம் 2021–2022ன் UnTied அலகின் கீழ் வார்டு எண்.10, மாவடிக்கால், இரயில்வே பீடர் ரோட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணி. | 06/2022–23 பக்கம் எண்.1– 19 | – | – | 50000 |
| | மொத்தம் | | 44,000 | 44,000 | 264613 |

மேற்காணும் விபரப்படி அப்பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்1% மற்றும் 5% கூடுதல் வைப்புத்தொகை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.3,52,613/—யை திரு.M.ராஜேந்திர பிரசாத், ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 852/2022/இ1)**

**தீர்மானம் எண்:— 396**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.33

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திரு.C.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர் 2020—2021ம் ஆண்டில் பொதுநிதியின் கீழ் எடுத்து செய்து கீழ்காணும் பணி முடிவு பெற்று ஒரு ஆண்டிற்கு மேல் ஆகுவதாலும், தணிக்கை முடிவுற்றுள்ளதாலும் அப்பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 1% மற்றும் 5% கூடுதல் வைப்புத்தொகைகளை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | அளவு புத்தகம் எண் மற்றும் பக்கம் எண். | 1 % ஒப்பந்தப் புள்ளி முன் வைப்புத் தொகை | 1 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி — வார்டு எண்.13, 14 மற்றும் 15—ல் உள்ள தெருக்களில் சிமெண்ட் பேவர் பிளாக் கல் பதித்தல். | 41/2014—15 பக்கம் எண்.1— 30 | ரூ.30,000/— | ரூ.30,000/— | 1,41,463/— |
| 2 | கடையநல்லூர் நகராட்சி — வார்டு எண்.16, 17 மற்றும் 18—ல் உள்ள தெருக்களில் சிமெண்ட் பேவர் பிளாக் கல் பதித்தல். | 47/2014—15 பக்கம் எண்.1— 38 | ரூ.29,000/— | ரூ.29,000/— | 1,26,845/—<br>18,250/—<br>---------<br>1,45,095/—<br>--------- |
| **மொத்தம்** | | | **ரூ.59,000/—** | **ரூ.59,000/—** | **ரூ.2,86,558/—** |

மேற்காணும் விபரப்படி அப்பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 1% மற்றும் 5% கூடுதல் வைப்புத்தொகை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.4,04,558/—யை திரு.C.கார்த்திகேயன், ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 2291/2022/இ1)**

**தீர்மானம் எண்:— 397**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.34

நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு முதல் தளத்தில் உரிய வசதிகளுடன் கூடுதல் அறை ஏற்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.350000/—க்கு மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4124/2023/இ1)**

**தீர்மானம் எண்:— 398**

ஒத்திவைக்கப்பட்டது.

(ஓம்) M.A.ஹபீபுர் ரஹ்மான்,
நகர் மன்ற தலைவர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.